நகர் ஊரமைப்புத்துறை (DTCP)
திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம்
திருப்பூர் மாநகராட்சி

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், திருப்பூர் மாநகராட்சி, வேலம்பாளையம் கிராமம், க.ச.எண்: **598/17A** -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண்: Z8KYCSF2 நாள்:25.07.2023

அளவுத் திட்டம்: 1 :400

வ

குறிப்பு :

மனைஉட்பிரிவின் பரப்பளவு: 0.46 ½ ஏக்கர் (அ) 1885.00 ச.மீ

கோரிய மனைகள் : 8

ஒதுக்கிய மனைகள் : 8

மனைஉட்பிரிவு எல்லை

நிலையிலுள்ள சாலை/ அணுகுசாலை

பொது ஒதுக்கீடுகள்:

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை

மனை உட்பிரிவின் பரப்பளவு = 1885.00 ச.மீ

ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு =(1885.00)x10% = 188.50 ச.மீ

10% பூங்கா பரப்பான 188.50 ச.மீ பரப்பளவிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பீட்டின் படி உரிய தொகை அரசு கணக்கு தலைப்பில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

கட்டட வரம்பு :-

9.0 மீ அகல வரையிலான சாலைகளுக்கு 1.50மீ -ம் விடப்படல் வேண்டும்.

9.0 மீ முதல் 18.0மீ அகல வரையிலான சாலைகளுக்கு 3.0மீ -ம் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்

1. அரசாணை எண். 181 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020- மற்றும் அரசாணை எண். 141 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022- ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. இம் மனை உட்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனை உட்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனை உட்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைகுண்டான மனை உட்பிரிவுகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனை உட்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம்/விடுதலின்றி மனை உட்பிரிவு நுழைவாயிலில் 0.6மீ x 1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

SWP/DTCP/TIRUPPUR LPA/SUBDIVISION NO.57/2023

PLANNING PERMISSION NO.58 /2023

உறுப்பினர் செயலர் (பொ)
திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்

திருப்பூர் மாநகராட்சி


~~வரைபடம்~~ மனைஉட்பிரிவு அனுமதி வழங்கப்பட்டது

தெ.மூ.54/ F1/2434/2023/M1

அலுவலக உத்தரவில் கண்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ~~வரைபடம்~~ / மனை உட்பிரிவு அனுமதி வழங்கப்படுகிறது.

ஆணையாளர்
திருப்பூர் மாநகராட்சி

04/01/24
AE(P)



பா.ஜெயராணி
அளவர்/உதவி வரைவாளர்

சு.காளிமுத்து
வரைவாளர் நிலை - III

வே.பிரேம்குமார்
கட்டட கலை/திட்ட உதவியாளர்

Document certified by Rushparaj B.
Signed by: Assistant Director
Location:Tiruppur
Date:2023.[illegible]:57:18